அ.வ எண் 20/2012 எல்லப்பன் (பிசா2) தேதி:10.01.2023

பிரதிவாதிகள் 1 முதல்9 மற்றும் 11,12 மற்றும் 15 முதல் 17 தரப்பில் குறுக்கு விசாரணை.

தாவா சொத்துக்கள் ஆதியில் ஐயப்ப நாயாக்கர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஐயப்ப நாயக்கருக்கு லட்சுமியம்மாள் , சுப்பம்மாள் மற்றும் ஆவுடைத்தாய் என்ற 3 பெண் குழந்தைகள் உண்டு என்றால் சரிதான். மேற்படி ஐயப்ப நாயக்கர் தாவா சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலமாக தனது 3 பெண் குழந்தைகளுக்கும் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரிதான் . மேற்படி லட்சுமியம்மாள் என்பவருக்கு குழந்தைகள் இல்லை என்று சொன்னால் சரிதான் . மேற்படி லட்சுமியம்மாள் தனக்கு உயில் மூலம் கிடைத்த 1/3 பங்கை எனக்கு உயில் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான் .மேற்படி ஐயப்ப நாயக்கர் எழுதிய உயில் ஆவணமும், மேற்படி லட்சுமியம்மாள் எழுதிய உயில் ஆவணத்தையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான் . மேற்படி சுப்பம்மாள் என்பவர் உயிலின் படி தனக்கு கிடைத்த 1/3 பங்கை கிருஷ்ணம்மாள் மற்றும் அய்யம்மாள் / 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்குஉயில் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . மேற்படி ஆவுடைத்தாய் என்பவருக்கு 9 குழந்தைகள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சுப்பம்மாள் எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்து வாரிசுரிமை சட்டத்தின் படி தாவா சொத்தில் 18/54 பங்கு எனக்க கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான் . எனது சகோதரிகளான 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு தலா 9/54 பங்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான் . மேற்படி ஆவுடைத்தாயின் 9 வாரிசுகளுக்கும் தலா 2/54 பங்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து ஆதியில் ஐயப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்காக ஒரு விற்பனை சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண்.2198 எனது பெயரிலும் மற்றும் 3 நபர்கள் பெயரிலும் உள்ளது என்றும் அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(இந்த வழக்கோடு தொடர்புடைய அசல் வழக்கு எண் .47/2015 என்ற வழக்கில் இந்த சாட்சி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சி 20.12.2018 ம் தேதி இந்த பிரதிவாதிகளால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார் . எனவே மேற்படி குறுக்கு

விசாரணை இந்த வழக்கில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையோடு ஒரு பாகமாக பதிவு செய்யப்படுகிறது.)

இந்த வழக்கில் வாதியின் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

14 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.